பாடம் - 16

# புத்தியே பலம்

ஒரு காட்டில் வயது முதிர்ந்த சிங்கம் ஒன்று வாழ்ந்து வந்தது. அந்தச் சிங்கத்தால் இப்போது மிருகங்களை வேட்டையாட முடியாது. எனவே அது பசியால் வாடியது.

ஒரு குகையருகே வந்தது. குகை வாயிலில் எலும்புத் துண்டுகளைக் கண்டது. மிருகம் ஒன்றின் கால் அடையாளங்களையும் கண்டது.

''இந்தக் குகையில் ஏதோ ஒரு மிருகம் வாழ்கின்றது. நான் இதற்குள் ஒளிந்திருந்து, மாலையானதும் இந்தக் குகைக்குள் வசிக்கும் மிருகத்தைப் பிடித்து உண்ணலாம்'' என்று சிங்கம் தனக்குள் நினைத்தது.

மாலையானதும், நரி தன் குகைக்கு வந்தது. மிகப் பெரிய மிருகம் ஒன்றின் கால் தடயங்களைக் கண்டது சிறிது நேரம் திகைத்து நின்றது. பின்னர் அமைதியாகச் சிந்தித்தது.



''குகையாரே! நான் நரி வந்திருக்கின்றேன். உள்ளே வரலாமா?'' என்று கேட்டது.

குகை பேசவில்லை.

''குகையாரே! நீர் பேசாதிருந்தால் நான் திரும்பிச் சென்று விடுவேன்'' என்று கூறித் திரும்பியது. குகைக்கு உள்ளே இருந்த சிங்கம் ''நானிருக்கும் குகை பேசும் போலிருக்கின்றது. நான் இங்கே இருப்பதால் தான் பேசாதிருக்கின்றது'' என்று நினைத்து ''நரியாரே நில்லுங்கள். நீங்கள் தாராளமாக உள்ளே வரலாம்'' என்று கூறிக் கர்ச்சித்தது.

குகையின் உள்ளே சிங்கம் இருப்பதை நரி அறிந்துக் கொண்டது. திரும்பிப் பாராமல் ''தப்பினேன் பிழைத்தேன்'' என்று ஓட்டம் பிடித்தது.



குறிப்பு : * உணர்வு பூர்வமாக ஏற்ற தொனியுடன் வாசிக்க நெறிப்படுத்தி பின் பாத்திரமேற்று நடிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

* இது போன்று வேறு சிறுவர் கதைகளைச் சேகரித்து தொகுத்து நூல்களாக்கி மாணவர்களை வாசிக்க வழிநடாத்துக.